Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 024 | வெள்ளிக்கிழமை Friday | 24.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

### தமிழக சட்டமன்றத் தேர்தல் விறுவிறுப்பாக நடந்தது:

## தமிழ்நாடு வெல்லும்... வாக்களித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேட்டி



சென்னை: திமுக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தனது குடும்பத்துடன் சென்று வாக்களித்து ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார். தமிழ்நாட்டில் 17-வது சட்டமன்றத் தேர்தலுக்கானவாக்குப்பதிவு, ஒரே கட்டமாக 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் (ஏப்ரல் 23)காலை 07.00 மணிக்கு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. காலை முதலே பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்து வருகின்றனர். அதேபோல் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், வேட்பாளர்கள், திரைப் பிரபலங்கள், தொழிலதிபர்கள் உள்ளிட்டோர் ஆர்வத்துடன் வாக்களித்து வருகின்றன. மாலை 06.00 மணியுடன் வாக்குப்பதிவு நிறைவடைகிறது. தற்போது கோடைக்காலம் என்பதால் வாக்குச்சாவடி மையங்களில் நிழற்பந்தல் அமைக்கப்பட்டுள்ளது.அந்தவகையில்,சென்னை தேனாம்பேட்டையில் உள்ள S.I.E.T. கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடி மையத்திற்கு தனது மனைவி துர்கா ஸ்டாலின், மகனும், துணை முதலமைச்சரு மான உதயநிதி ஸ்டாலின், மருமகள் கிருத்திகா உதயநிதி, பேரனும்,ரெட்ஜெயண்ட் மூவிஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியுமான இன்பநிதி ஆகியோருடன் சென்ற திமுக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின், மக்களோடு மக்களாக வரிசையில் காத்திருந்து வாக்களித்து தனது ஜனநாயகக் கடமையை ஆற்றினார். பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், "நான் எப்படி ஜனநாயகக் கடமையை ஆற்றியுள்ளேனோ அதே போல் தமிழ்நாட்டு வாக்காளர்களும் தங்களது ஜனநாயகக் கடமையை முறையாக ஆற்றவேண்டும். தவறாமல் ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

மேலும், நடிகர் அஜித் மாற்றம் வேண்டுமா என்ற கேள்விக்கு no need என பதில் அளித்துள்ளார். இதற்கு உங்களுடைய பதில் என்ன?என்ற செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், நடிகர் அஜித் கூறியது நல்ல கருத்து தான். தமிழ்நாடு வெல்லும் என்று கூறினார். கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் தொடர்ந்து நான்காவது முறையாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் போட்டியிடுகிறார். அதேபோல் திமுக இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் இரண்டாவது முறையாகப் போட்டியிடுகிறார் என்பது குறிப்பிட த்தக்கது.தேர்தலில் 5.73 கோடி பேர் வாக்களிக்கவுள்ளனர். 442 பெண்கள் உள்பட 4,023 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். தேர்தல் பாதுகாப்புப் பணியில் 295 துணை ராணுவப் படை கம்பெனிகளைச் சேர்ந்த வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். அதேபோல், 1 லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ்நாடு போலீசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இத்தேர்தலில் திமுக, அதிமுக, நாம் தமிழர் கட்சி, தமிழக வெற்றிக் கழகம் என நான்குமுனைப் போட்டி நிலவுகிறது. பதிவாகும் வாக்குகள் வரும் மே 04- ஆம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளது.

## சிலுவம்பாளையத்தில் குடும்பத்துடன் சென்று வாக்களித்த எடப்பாடி பழனிசாமி




சேலம்: தனது சொந்த கிராமமான சிலுவம்பாளையத்தில் உள்ள வாக்குச்சாவடியில் தனது குடும்பத்துடன் சென்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வாக்களித்தார்.

தமிழ்நாடு சட்டமன்றத்தேர்தலுக்கானவாக்குப்பதிவு, ஒரே கட்டமாக 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் (ஏப்ரல் 23) காலை 07.00 மணிக்கு தொடங்கிவிறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. மாலை 06.00 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில் காலை முதலே பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்து வருகின்றனர். இத்தேர்தலில் திமுக, அதிமுக, நாம் தமிழர் கட்சி, தமிழக வெற்றிக் கழகம் என நான்குமுனைப் போட்டி நிலவுகிறது.

75,064 வாக்குச்சாவடிகளில் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் 5.73 கோடி பேர் வாக்களிக்கவுள்ளனர்.442பெண்கள் உள்பட 4,023 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். தேர்தல் பாதுகாப்புப் பணியில் 295 துணை ராணுவப் படை கம்பெனிகளைச் சேர்ந்த வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.அதேபோல், 1 லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ்நாடு போலீசாரும் பாதுகாப்புபணியில் ஈடுபட்டுள்ளனர். வாக்காளர்களுக்கு தேவையான நிழற்பந்தல் மற்றும் குடிநீர், கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. அதேபோல், முதியவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு உதவுவதற்காக தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.இந்த நிலையில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், வேட்பாளர்கள், திரைப் பிரபலங்கள் உள்ளிட்டோர் நீண்ட வரிசையில் காத்திருந்துவாக்களித்து வருகின்றனர். அந்த வகையில், சேலம் மாவட்டம், எடப்பாடி அருகே உள்ள சிலுவம்பாளையம் கிராமத்திற்கு தனது குடும்பத்துடன் சென்றஅதிமுகபொதுச்செயலாளரும், சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி, சிலுவம்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் உள்ள வாக்குச்சாவடியில் வாக்களித்தார்.

அதைத் தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்த அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, "வாக்காளர்கள் அனைவரும் வாக்குச்சாவடி மையத்திற்கு வந்து தங்களது ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும். தேர்தலில் வெற்றி பெறுவது தொடர்பாக நான் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறேன்" என்றுநம்பிக்கைத்தெரிவித்தார்.

சேலம் மாவட்டத்தில் மொத்தம் 11 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. இதில் முக்கியமான தொகுதியாகவும், நட்சத்திரத் தொகுதியாகவும் உள்ளது எடப்பாடி சட்டமன்றத் தொகுதி. எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் எட்டாவது முறையாக அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் வேட்பாளராக முதன்முறையாக வாக்களித்த விஜய்

சென்னை: தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் நடிகராக இல்லாமல் தமிழக வெற்றிக் கழகத்தின் கட்சித் தலைவராகவும், வேட்பாளராகவும் விஜய் முதன்முறையாக வாக்களித்தார்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு, ஒரே கட்டமாக 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் (ஏப்ரல் 23) காலை 07.00 மணிக்கு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்றது..



இந்ததேர்தலில்திமுக, அதிமுக, நாம் தமிழர் கட்சி, தமிழக வெற்றிக் கழகம் என நான்குமுனைப் போட்டி நிலவுகிறது. தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் 5.73 கோடி பேர் வாக்களிக்கவுள்ளனர். 442 பெண்கள் உள்பட 4,023 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

தேர்தல் பாதுகாப்புப் பணியில் 295 துணை ராணுவப் படை கம்பெனிகளைச் சேர்ந்த வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். அதேபோல், 1 லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ்நாடு காவல்துறையினரும்பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர். முதியவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்யேக ஏற்பாடுகள் அனைத்து வாக்குச்சாவடி மையத்திலும் செய்யப்பட்டுள்ளன.

மாலை 06.00 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில் காலை முதலே பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்து வருகின்றனர். அதேபோல் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், வேட்பாளர்கள், திரைப் பிரபலங்கள், அமைச்சர்கள் உள்ளிட்டோர் மக்களுடன் வரிசையில் காத்திருந்து வாக்களித்து வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக, சென்னை நீலாங்கரை கபாலீஸ்வரர் நகரில் உள்ள இல்லத்தில் இருந்து காரில் புறப்பட்ட தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட நீலாங்கரையில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடி மையத்திற்கு சென்று அங்கு அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் தனது வாக்கினைப் பதிவுச் செய்தார். அதைத் தொடர்ந்து வாக்குச்சாவடியில் இருந்த முதியவர்களுடன் கலந்துரையாடினார். பின்னர் விஜய்யை பாதுகாப்புடன் போலீசார் வெளியே அழைத்துச் சென்றனர்.

கடந்த தேர்தல்களில் நடிகராக வாக்களித்த விஜய்,இம்முறைதமிழக வெற்றிக் கழகத்தின் தலைவராகவும், வேட்பாளராகவும் முதன்முறையாக வாக்களித்துள்ளார். திருச்சி கிழக்கு மற்றும் பெரம்பூர் சட்டமன்றத் தொகுதிகளில் விஜய் போட்டியிடுகிறார். அதேபோல், தமிழக வெற்றிக் கழகம் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இத்தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் மே 04-ஆம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளது. இதனிடையே, விஜய்யின் வருகையால் வாக்குச்சாவடி மையத்தில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

தினத்தளம் தினசரி காலை நாளிதழ்


# தமிழக சட்டமன்ற தேர்தல்: வாக்கு செலுத்திய அரசியல் கட்சித் தலைவர்கள்


உதயநிதி ஸ்டாலின்


கனிமொழி


வைகோ



ஜி.கே.வாசன்


அன்பில் மகேஸ்


கே.என்.நேரு


திருமாவளவன்


அன்புமணி



துரை வைகோ


கமல்ஹாசன்


அண்ணாமலை


வானதி சீனிவாசன்


சீமான்


பிரேமலதா


நயினார் நாகேந்திரன்

## மணக்கோலத்தில் வந்து ஜனநாயகக் கடமை

செங்கல்பட்டு: தமிழகத்தில் இன்று சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற்ற நிலையில், திருமணமான கையோடு, புதுமணத் தம்பதிகள் வாக்குச்சாவடிகளுக்கு வந்து வாக்களித்தனர்.

முகூர்த்த நாள் என்பதால் காலையிலிருந்தே பல்வேறு இடங்களில் திருமணம் முடித்த கையோடு, பல ஜோடிகள் மாலையுடன் வந்து வாக்களித்தனர். இந்த சூழலில் செங்கல்பட்டு மாவட்டம் மறைமலை நகரை சேர்ந்த தனசேகர் - பிரீத்தி தம்பதியினருக்கு இன்று திருமணம் நடைபெற்றது.

தங்களது வாழ்வின் மிக முக்கியமான நாள் என்றபோதிலும் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஜனநாயகக் கடமை மிக முக்கியம் என்பதை உணர்ந்த இந்தத் தம்பதி திருமணக் கோலத்திலேயே நேராக வாக்குச்சாவடிக்கு வந்தனர். பொத்தேரி அருகே அமைந்துள்ள காட்டூர் அரசு நடுநிலைப் பள்ளியில் உள்ள வாக்குச் சாவடிக்கு வந்த அவர்கள், மற்ற பொதுமக்களுடன் வரிசையில் நின்று தங்களது வாக்குகளை செலுத்தினர்.

இது குறித்து அந்த ஜோடி கூறுகையில், "பலருக்கு பணி நிமித்தமாகவும், இடமாற்றம் நிமித்தமாகவும் இந்த முறை வாக்களிக்க வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால் எங்களுக்கு அந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதை வீணடிக்கக் கூடாது என்பதால் திருமணக் கோலத்திலேயே வந்து வாக்களித்தோம். வாக்களிப்பது நமது உரிமை மட்டுமல்ல. அது ஒவ்வொரு குடிமகனின் கடமையும் கூட" என்று தெரிவித்தனர்.

வாக்களிக்கும் நேரம் முடியும் நிலையில், திருமண மேடையிலிருந்து நேரடியாக வந்து வாக்களித்த இந்த இளம் தம்பதியினரின் செயல், அங்கிருந்த வாக்காளர்கள் மற்றும் தேர்தல் அலுவலர்களிடையே பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.





ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் அடுத்த குள்ளம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளியில்தமிழகவெற்றிக்கழகம்நிர்வாககுழுதலைமைஒருங்கிணைப்பாளர் கே.ஏ.செங்கோட்டையன் காலை 6:45 மணிக்கே வாக்குச்சாவடி முன்னதாக வருகை தந்தார். பின்னர் பொதுமக்களுடன் நீண்ட வரிசையில் காந்திருந்த செங்கோட்டையன், தனது ஜனநாயக கடமையாக வாக்கை செலுத்தினார்.

# தமிழ்நாட்டில் ஆர்வமுடன் வாக்களித்த இளம் தலைமுறை வாக்காளர்கள்!



காரைக்குடி:

காரைக்குடி பாரி நகரில் அமைந்துள்ள சுப்பையாஅம்பலம்மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி வாக்குச்சாவடியில், அண்ணாமலையார்நகரைசேர்ந்தமுதல் தலைமுறை வாக்காளர் லெட்சுமணன் தனது வாக்கை பதிவு செய்தார்.

முதல் முறையாக வாக்களித்த அனுபவம் குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

"முதல் தடவையாக வாக்களித்தது எனக்கு மிகுந்த சந்தோஷத்தை அளித்தது. இன்று காலையிலேயே வந்து என் ஜனநாயக கடமையைநிறைவேற்றியது மிகவும் சிறப்பாக இருந்தது", என கூறினார். மேலும், அனைவரும் தங்களது வாக்குரிமையை உணர்ந்து, முடிந்தவரை சீக்கிரமாக வாக்குச்சாவடிகளுக்கு சென்று வாக்களிக்க வேண்டும் என பொதுமக்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்தார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்டத்தில் நேற்று 23.04.2026 தூய்மைப்பணியாளர்கள் தங்களது வாக்கினை செலுத்தி ஜனநாயகக் கடமையினை ஆற்றினார்கள்.



தமிழகம் முழுவதும் நேற்று (ஏப்.23) வாக்குப்பதிவு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில் ஈரோடு கிழக்குதவெக வேட்பாளர் விஜய்பாலாஜி, கருங்கல்பாளையம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நேற்று தனது மனைவியுடன் வரிசையில் நின்று வாக்களித்தார்.

# திருப்பரங்குன்றத்தில் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவேன் என்கிற நம்பிக்கை உள்ளது

## அதிமுக வேட்பாளர் ராஜன் செல்லப்பா பேட்டி



தமிழக சட்டசபை தேர்தல் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது இந்த சூழலில் அனைத்து கட்சிதலைவர்கள்வேட்பாளர்கள் பொதுமக்கள் தங்கள் வாக்கினை செலுத்தி வருகின்றனர். மதுரை திருப்பரங்குன்றம் அதிமுக வேட்பாளர் ராஜன் செல்லப்பா பசுமலையில் உள்ள தனியார் பள்ளியில் தனது வாக்கினை செலுத்தவினர் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து அவர் கூறியதாவது: திருப்பரங்குன்றம் வெற்றி தொகுதியாக அதிமுக கூட்டணி வெற்றிக்கு முன்னுதாரணமாக இருக்கும். மிகப்பெரிய வித்தியாசத்தில் அதிமுக வெற்றி பெறும். திருப்பரங்குன்றத்தில் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறுவேன் என்கிற நம்பிக்கை உள்ளது யாரை கேட்டாலும் அதிமுக என்று சொல்கிறார்கள். அதிமுக ஆட்சிக்கு வருவது உறுதி என கூறினார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026, வாக்குப்பதிவு நாளான நேற்று (23.04.2026) ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி 98 ஈரோடு கிழக்கு சட்டமன்றத்தொகுதி சம்பத்நகர், ஸ்ரீ அம்மன் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியில் உள்ள வாக்குச்சாவடியில் தனது வாக்கினை செலுத்தி ஜனநாயகக்கடமையினை ஆற்றினார்.

# தூத்துக்குடியில் திமுக வேட்பாளரும் அமைச்சருமான கீதா ஜீவன் தனது குடும்பத்தினருடன் வந்து தனது வாக்கைச் செலுத்தினார்



தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு காலை தொடங்கியது. தூத்துக்குடி போல்பேட்டைபகுதியில்உள்ள கீதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள 83-வது வாக்குச்சாவடிக்கு காலைசரியாக7மணிக்கு அமைச்சர் கீதா ஜீவன் வருகை தந்தார். வரிசையில் முதல் ஆளாக நின்று அவர் தனது ஜனநாயகக் கடமையை ஆற்றினார்.

வாக்களித்தபின்செய்தியாளர்களிடம் பேசிய அவர், "தூத்துக்குடி தொகுதியில் திமுகவின் வெற்றி வாய்ப்பு மிகவும் பிரகாசமாக உள்ளது. தமிழகத்தில்திமுககூட்டணி மிகப்பெரிய வெற்றியைப்பெற்று,திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் மீண்டும் முதல்வராகப் பொறுப்பேற்பார்" எனத் தெரிவித்தார்.

அமைச்சரைத் தொடர்ந்து, அவரது கணவரும் திமுக கலை இலக்கிய அணி அமைப்பாளருமான ஜீவன் ஜேக்கப் மற்றும் அவரது மகன் டாக்டர்மதில்ஜான் ஆகியோரும்அதேவாக்குச்சாவடியில் தங்களது வாக்குகளைப் பதிவு செய்தனர். தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் காலை முதலே வாக்காளர்கள் நீண்ட வரிசையில் நின்று ஆர்வத்துடன் வாக்களித்து வருகின்றனர். பதற்றமான வாக்குச்சாவடிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026, வாக்குப்பதிவு நாளான நேற்று (23.04.2026) ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி துணைவியார் சகிலா 98 ஈரோடு கிழக்கு சட்டமன்றத்தொகுதி சம்பத்நகர், ஸ்ரீ அம்மன் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியில் உள்ள வாக்குச்சாவடியில் தனது வாக்கினை செலுத்தி ஜனநாயகக்கடமையினை ஆற்றினார்.



ஈரோடு மாவட்டம் பெருந்துறை அதிமுக வேட்பாளர் ஜெயக்குமார், அரசு தொடக்கப் பள்ளியில் நேற்று காலை தனது குடும்பத்துடன் வரிசையில் நின்று வாக்களித்தார். பின்னர் பேட்டியளித்த அவர், நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.



திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் கிருத்திகா தங்கபாண்டி தனக்கன்குளம் கள்ளர் மேல்நிலைப் பள்ளியில் உள்ள வாக்கு மையத்தில் தனது வாக்கை பதிவு செய்தார்.



தூத்துக்குடி போல்பேட்டை பகுதியில் உள்ள தங்கம்மாள் மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிக்கு மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி வரிசையில் நின்று அவர் வாக்கினை செலுத்தி தனது ஜனநாயகக் கடமையை ஆற்றினார்.

# பெரியகுளத்தில் ஓபிஎஸ் வாக்கினை பதிவு செய்தார்



தேனி, ஏப்.24- தேனி மாவட்டம், பெரியகுளம் வடகரை பகுதியில் தனியார் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில், முன்னாள் முதல்வரும் போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளருமான ஓ.பன்னீர்செல்வம் தனது வாக்கினை பதிவு செய்தார். இதேபோல், முன்னாள் தேனி பாராளுமன்ற உறுப்பினர் ப.ரவீந்திரநாத் தனது வாக்கினை பதிவு செய்தார். முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது: தமிழகத்தில் மதச்சார்பற்ற முற்போக்குகூட்டணிவெற்றிபெற்று மீண்டும்தமிழக முதல்வராக மு.கஸ்டாலின் இரண்டாவது முறையாக பொறுப்பேற்பார். 200க்கும் மேற்பட்ட இடங்களில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி பெறும். அனைவரும் ஜனநாயக கடமை ஆற்ற வேண்டும் என்று தெரிவித்தார். இந்த நிகழ்வின் போது திமுக கூட்டணி நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்கள் என ஏராளமானோர் திரளாக கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதியின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் செந்தில்நாதன் தனது வாக்கினை ஈரோடு வீரப்பன் சத்திரம் பகுதி உள்ள மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் பதிவு செய்தார்.பின்பு அவர் பேசுகையில், தமிழகத்தில் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்று வருவதாக கூறினார்.



தமிழக சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று காலை 7 மணி முதல் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில், பெருந்துறை தொகுதி திமுக வேட்பாளர் தோப்பு வெங்கடாசலம் தனது வாக்கினைப் பதிவு செய்தார். பெருந்துறை வட்டாரத்திற்குட்பட்ட தோப்புபாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடிக்கு நேரில் சென்ற அவர், வரிசையில் நின்று தனது ஜனநாயகக் கடமையை ஆற்றினார்.



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் அதிமுக வேட்பாளர் வி.பி. பிரபு, அளுக்குளி அரசுத் தொடக்கப்பள்ளியில் நேற்று காலை 7 மணிக்கே குடும்பத்துடன் வந்து வரிசையில் நின்று வாக்களித்தார். பின்னர் வாக்குச்சாவடியில் மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள் மற்றும் குடிநீர் வசதி குறித்து ஆய்வு செய்தார்.



ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி தமிழ் மாநில காங்கிரஸ்கட்சிவேட்பாளர்எம்.யுவராஜா, நேற்றுதிண்டல் அரசுப் பள்ளியில் பொதுமக்களுடன் வரிசையில் நின்று தனது வாக்கினைப் பதிவு செய்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "ஜனநாயகக் கடமையை நிறைவேற்றும் வகையில் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.



செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் ( தனி ) சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் அமுலு பொன்மலர், தனது சொந்த ஊரான பெரும்பேர்கண்டிகை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் வாக்குச்சாவடி எண் : 200 ல் தனது கணவர் சிவக்குமாருடன் வாக்களித்து ஜனநாயக கடமையை நிறைவேற்றினார்.

## கோவை கவுண்டம்பாளையம் அடுத்த மஞ்சீஸ்வரி காலனி பகுதியில் உள்ள பி. எம்.ஏ நடுநிலை பள்ளியில் தனது வாக்கை செலுத்திய தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் வேட்பாளர் வழக்கறிஞர் புஸ்பாணந்தம்



தமிழகத்தில் ஒரே கட்டமாகஅனைத்துமாவட்டங்களிலும் தேர்தல் நடைபெற்றது

இந்த நிலையில் கோவை மாவட்டம் கவுண்டம்பாளையம், அடுத்த மஞ்சீஸ்வரி காலனியில் உள்ள பி. எம். ஏ நடுநிலைப் பள்ளியில், கோவை கவுண்டம்பாளையம் சட்ட மன்ற தொகுதியில் சிலிண்டர் சின்னத்தில், போட்டியிட்ட தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் வேட்பாளர், சமூக ஆர்வலர் வழக்கறிஞர் புஸ்பாணந்தம் தனது வாக்கை தனது மனையுடன் வந்து செலுத்தினார். நீண்ட வரிசையில் நின்று தனது வாக்கை செலுத்திய அவர், தேர்தல் பணிகள் குறித்தும், வாக்கு பதிவுகுறித்தும் நேரில் பார்வையிட்டார் மேலும் தேர்தல் அதிகாரிகளிடமும் கேட்டறிந்தார். பின்னர் தனது ஜனநாயக கடமையை யான வாக்குகளை செலுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மணப்பாறை அருகே காவல் துறையை கண்டித்து பொதுமக்கள் தேர்தலை புறக்கணித்து போராட்டம்

திருச்சி: மணப்பாறை அருகேகாவல்துறையை கண்டித்து பொதுமக்கள் வாக்களிக்கமறுத்து போராட்டம் நடத்திய சம்பவம் அப்பகுதியில்



பரபரப்பை ஏற்படுத்தியது.

திருச்சி மாவட்டம், மணப்பாறை தொகுதி வெள்ளையக்கோன்பட்டியில் அரசு தொடக்கப்பள்ளியில் வாக்குச்சாவடி எண் 225-ல் வாக்குப்பதிவு நடைபெற்று வரும் நிலையில் வாக்குச்சாவடிக்கு 100 மீட்டருக்கு அப்பால் அரசியல் கட்சியினர் தங்கள் கட்சி சின்ன த்திற்கு வாக்கு கேட்டு பிரச்சாரம் செய்து கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. அப்போது அவ்வழியாக வந்த அதிரடிப்படை போலீஸார் அரசியல் கட்சி பிரமுகர்கள் சிலரை கலைந்து போகச் சொல்லி தாக்கியதாக கூறப்படுகிறது.

திமுக நிர்வாகி சண்முகமூர்த்தி என்பவரை தாக்கிதோடு போலீஸார் அவரை வேனில் ஏற்றி அழைத்துச் சென்றுள்ளனர். இதனால் அதிர்ச்சி அடைந்த வெள்ளையக்கோன்பட்டி பொதுமக்கள் வாக்களிப்பதை நிறுத்திவிட்டு வளநாடு கைகாட்டி - புத்தாநத்தம் சாலையில் முட்கள் மற்றும் கட்டைகளை போட்டு தடுப்பு ஏற்படுத்தி சாலை மறியலில் ஈடுபட்டனர்

போலீஸார் அழைத்துச்சென்ற சண்முகமூர்த்தியை விடுவிக்க வேண்டும். பொதுமக்களை தாக்கிய போலீஸார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கூறி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மணப்பாறை டிஎஸ்பி காவியா, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் பாலகாமாட்சி ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பொதுமக்களின் மறியலால் சண்முகமூர்த்தி விடுவிக்கப்பட்ட நிலையிலும் பொதுமக்கள் மறியல் மற்றும் வாக்களிப்பு புறக்கணிப்பு போராட்டத்தை வருகின்றனர். பொதுமக்களின் மறியலால் 11.10 மணிமுதல் மதியம் 2.40 வரை வாக்குப்பதிவு நடைபெறவில்லை.

இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது



சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே தொளசம்பட்டியில் உள்ள பேரறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வாக்குசாவடி மையங்களில் வாக்காளர்கள் காலை 7 மணி முதல் தனது வாக்கினை நீண்ட வரிசையில் நின்று வாக்கு செலுத்தி ஜனநாயக கடமையை நிறைவேற்றினர். தொளசம்பட்டியில் அமைதியான முறையில் விறுவிறுப்பாக வாக்கு பதிவு நடைபெற்றது.




செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தனி தொகுதிக்கு உட்பட்ட தண்டலம் ஆர் சி மேல்நிலைப் பள்ளியில் அதே பகுதியில் சேர்ந்த மணமகன் சக்திவேல் மணமகள் ஜெயலட்சுமி இவர்கள் இருவருக்கும் இன்று காலை திருமணம் நடந்தது இவர்கள் அதே மணக்கோலத்தில் வந்து ஜனநாயக கடமையை ஆற்றி வாக்களித்தனர்

## வாக்குப்பதிவு மையத்துக்கு வந்த காட்டு யானை! மேற்கு வங்க தேர்தல் சுவாரஸ்யம்



கொல்கத்தா: மேற்கு வங்கத்தின் ஜார்கிராமில் அமைக்கப்பட்டுள்ள வாக்குப்பதிவு மையத்துக்கு காட்டு யானை ஒன்று காலையிலேயே வந்ததால் அதிகாரிகளும் வாக்காளர்களும் அச்சமடைந்தனர்.

தேர்தலின்போது செல்வாக்குமிக்கவர்கள் வாக்குப்பதிவு மையங்களில் தம் பலத்தைக் காட்ட முயல்வது மேற்கு வங்க அரசியலில் சாதாரணமானதுதான் என்ற போதிலும், இது ஒரு வித்தியாசமான பலப் பிரயோகமாக இருந்தது. வாக்காளர்கள் வாக்களிக்க ஜிதுஷோல் தொடக்கப் பள்ளிக்கு வரத் தொடங்கிய நிலையில், திடீரென ராம்லால் என்ற காட்டு யானை பள்ளிக்குள் நுழைந்தது. மெதுவாக நடந்து சுற்றி வந்த அந்த யானையைப் பார்த்து வாக்குப் பதிவு மையத்தில் இருந்த அதிகாரிகளும் வாக்காளர்களும் அச்சமடைந்தனர்.

வாக்காளர்கள் நின்று கொண்டிருந்த வரிசையைக் கடந்து சென்ற அந்த யானை, அங்கிருந்த வாகனங்களை நோட்டமிட்டுக்கொண்டிருந்தது. இதனால், தேர்தல் பணிகள் சற்று தாமதமாகின. எனினும், லோதாஷூலி சரகத்தில் இருந்து விரைந்து வந்த வனத்துறை அதிகாரிகள், அந்த யானையை மெதுவாக பாதுகாப்பான தூரத்துக்கு அழைத்துச் சென்றனர். இதையடுத்து, வாக்குப்பதிவு மையம் விரைவாக இயல்பு நிலைக்குத் திரும்பியது.

## தாய்லாந்தில் இருந்து வாக்களிக்க வந்த ராணிப்பேட்டை குடும்பத்தினர்

ராணிப்பேட்டை: ராணிப்பேட்டையை சேர்ந்த ஒரு குடும்பத்தினர், தாய்லாந்தில் இருந்து வந்து சட்டமன்ற தேர்தலில் வாக்களித்துள்ளனர். தமிழகத்தில் மாற்றத்திற்காக வாக்களித்தோம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ராணிப்பேட்டை மாவட்டம், நவல்பூர் பகுதியைச் சேர்ந்த ஒருவர், தாய்லாந்தில் வசித்து வருகிறார். இவர் ஜனநாயகத்தின் மீது



கொண்ட பொறுப்புணர்வை வெளிப்படுத்தும் விதமாக தாய்லாந்தில் இருந்து குடும்பத்தினருடன் வந்து வாக்களித்துள்ளார்.

நவல்பூர் பகுதியை சேர்ந்த முரளி என்பவர், கடந்த 16 ஆண்டுகளுக்கு முன்பு வேலை வாய்ப்பிற்காக தாய்லாந்து சென்றார். தனது குடும்பத்துடன் அங்கேயே வசித்து வரும் அவர், தமிழகத்தில் நடைபெறும் தேர்தலை முன்னிட்டு தனது ஜனநாயக கடமையை நிறைவேற்றும் விதமாக தாய்லாந்தில் இருந்து இந்தியா திரும்பியுள்ளார்.

முரளி தனது மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்களுடன் நவல்பூரில் உள்ள கங்காதர நிதி உதவிப் பெறும் நடுநிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் வாக்களித்தார். அவர் குடும்பத்துடன் வந்து வாக்கு செலுத்தியதை அப்பகுதி மக்கள் வியப்புடன் பார்த்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முரளி, "புதியவர்களுக்கு வாய்ப்பு வழங்கி தமிழகத்தில் மாற்றத்தை கொண்டு வர வேண்டும் என்பதற்காகவே நாங்கள் தாய்லாந்தில் இருந்து வந்திருக்கிறோம். வாக்களிப்பது ஒவ்வொருவரின் முக்கியமான கடமை. அதனை நிறைவேற்றுவதில் பெருமை கொள்கிறோம்" என்று தெரிவித்தார்.

வெளிநாட்டில் வசித்தாலும் தாய்நாட்டின் ஜனநாயக திருவிழாவில் பங்கேற்க வேண்டும் என்ற அவரது உணர்வை பலதரப்பினரும் வெகுவாக பாராட்டி வருகின்றனர்.



காயல் பட்டிணம் சென்ரல் ஸ்கூல் வாக்கு சாவடியில் மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி மாநில தலைவர் காயல் அப்பாஸ் மற்றும் அவரது மகன் முகமது அலி ஆகிய இருவரும் ஜனநாயக கடமையை நிறைவேற்றினர்.



மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் (23.04.2026) மதுரை மாவட்டம், ஆயுதப்படை பயிற்சி மைதானத்தில் உள்ள மாநகராட்சி துவக்கப் பள்ளியில் தனது வாக்கினை பதிவு செய்தார்.

## கோவை பாப்பநாயக்கன் புதூர் பகுதியில் உள்ள மாநகராட்சி பள்ளியில் தனது வாக்கை செலுத்திய ஸ்டூல் சின்னத்தில் போட்டியிட்ட சுயேச்சை வேட்பாளர் சரவணன்



தமிழகத்தில் ஒரே கட்டமாக அனைத்து மாவட்டங்களிலும் தேர்தல் நடைபெற்று வருகின்றது. இந்த நிலையில் கோவை மாவட்டம் பாப்பநாயக்கன் புதூர் பகுதியில் உள்ள மாநகராட்சி பள்ளியில், கோவை வடக்கு தொகுதியில் ஸ்டூல் சின்னத்தில், போட்டியிட்ட சுயேச்சை வேட்பாளர் சரவணன் தனது வாக்கை செலுத்தினார். நீண்ட வரிசையில் நின்று தனது வாக்கை செலுத்தினார்.வாக்குசாவடியில்காத்திருந்த பொழுது மாற்று திறனாளி ஒருவர் வாக்குச்சாவடியில் இருந்து வெளியே வர முடியாமல் தவித்த நிலையில் உடனடியாக, சுயேட்சை வேட்பாளர் சரவணன் அந்த மாற்று திறனாளி பெண்ணுக்கு உதவினார். பின்னர் தனது ஜனநாயக கடமையை ஆற்றினார்.



கடலூர் மாவட்டம் திட்டக்குடி தனி சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் அமைச்சர் சி.வெ. கணேசன் கழுதூர் கிராமத்தில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் தனது வாக்கை பதிவு செய்தார்.




கடலூர் மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி கல்லூர் வாக்குச்சாவடியில் முன்னாள் மங்களூர் ஒன்றிய பெருந்தலைவர் கேஎன்டி. சுகுணா சங்கர் மங்களூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கேஎன்டி. சங்கர் ஆகியோர் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்றினர். அப்போது, திரளான திமுக கட்சி நிர்வாகிகளும் வரிசையில் நின்று வாக்களித்தனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.